விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும், அவினாசியில் ஒரு மாணவர் விடுதியும், ஆக மொத்தம் 3 விடுதிகளும் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற விடுதிகளைச் சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டும். மேலும் விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற அரசாக விளங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு 1991-96-க்கு இடைப்பட்ட 5 ஆண்டு கால ஆட்சியில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் எவ்வளவு வழங்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

63—

கட்டடம்

***6966—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் உதவி செயற் பொறியாளர் அலுவலக வளாகத்தில் உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? சொந்தக் கட்டடம் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவது ஏன்?

(ஆ) வாடகைக் கட்டடங்களுக்குத் தற்போது வழங்கி வரும் வாடகை எவ்வளவு?

2002 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குலசேகரம் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் அமைந்துள்ள இடம் பொதுப் பணித் துறையிடம் உள்ளது. மின் வாரியத்திற்கென நிலம் ஒதுக்குமாறு பொதுப் பணித் துறையிடம் கோரப்பட்டுள்ளது. இடம் ஒதுக்கப்பட்ட பிறகு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

குலசேகரம், உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திற்கு மாதம் ஐந்து ரூபாயும், நகர மற்றும் ஊரக உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களுக்கு மாதம் ரூ. 3100/- வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செருப்பாலூரில் ஏற்கெனவே உதவிப் பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு, பொதுப் பணித் துறை இடத்தை ஒதுக்கிக் கொடுத்து, அங்கே கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அதே வளாகத்திலே, மேலும் உதவிப் பொறியாளர்கள் அலுவலகம் கட்டுவதற்கான இடம் இருக்கிறது, வசதி இருக்கிறது. ஆகவே, அங்கே இப்போது வாடகைக்கு இருந்து கொண்டிருக்கின்ற அலுவலகங்களை, சொந்தமான இடத்திற்கு மாற்றுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் பிரத்தியேகக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.